**சம்பாவுக்கு ஊடுபயிராக குறுவை.. காட்டுயானத்தோடு கூட்டணி போட்ட மஞ்சள் பொன்னி!**

தென்னைக்கு ஊடுபயிராக கோகோ, மிளகாய்க்கு ஊடுபயிராக வெங்காயம் என இரண்டு அல்லது மூன்று வித பயிர்களை சாகுபடி செய்வது வழக்கமான ஒன்று. அதில் கொஞ்சம் வித்தியாசமாக நெல்லுக்கு ஊடுபயிராக நெல்லையே சாகுபடி செய்திருக்கிறார், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப் பூண்டியைச் சேர்ந்த நாடக நடிகர் கரிகாலன். மாப்பிள்ளைச் சம்பா, காட்டுயானம், சிவப்புக் குடவாழை, ராடக்குருவிகார் என பாரம்பர்ய ரகங்களையே தேடிப் பிடித்து வந்து சாகுபடி செய்வதில் ஆர்வம் கொண்டவர் கரிகாலன். “எனக்கு சொந்தமாக ஒரு ஏக்கர் நிலம் இருக்கிறது. பாரம்பரிய நெல் ரகங்களைப் பெருக்கணும். நமக்குத் தேவையான விதை நெல்லையெல்லாம் நாமே உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசை. அதனால் விதை நெல்லுகளை கொஞ்சம் கொஞ்சமாக சேகரிக்க ஆரம்பித்தேன். 100 கிராம், 200 கிராம் என்று வாங்கிச் சேர்த்த நெல்லை, என்னுடைய நிலத்தில் தனித்தனியாக பிரித்து விதைத்தேன். பஞ்சகாவ்யா, அமுதக்கரைசல், மீன் அமிலம் என்று முழுவதுமாக இயற்கை விவசாயம்தான். விதைத்த தொண்ணூறாவது நாட்களில் மஞ்சள் பொன்னியை மட்டும் அறுவடை செய்திருந்தேன். அதற்குள் மழை வந்து பயிர் அனைத்தும் அழிந்து போயிவிட்டது. அதில் காட்டுயானம் வகை நெல் மட்டும் கொஞ்சம் மிஞ்சியது. கையாலேயே உருவி எடுத்து பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். மொத்தம் ஏழு வகை நெல்லை நடவு செய்தேன். மழைக் கொட்டித் தீர்த்ததில் ஐந்து ரக பயிரும் அழிந்துவிட்டது. ஆனால் இரண்டு ரகப் பயிர் மட்டும் தாக்குப்பிடித்து நின்றது. இதில் இருந்து நான் கத்துக்கிட்ட பாடம் ஒரே ரகத்தை மட்டுமே தேர்ந்தெடுத்து நடவு செய்யக் கூடாது என்பதுதான். கையில் இருந்த அந்த இரண்டு வகை நெல்லையும் தான் இந்த வருடம் ஆடிப்பட்டத்திலே நாத்துப்பாவி நட்டேன். சம்பா ரக காட்டுயானம் 180 நாள் (ஆறு மாதம்) பயிர். குறுவை ரக மஞ்சள் பொன்னி 110 நாள் பயிர், சரியாக வராமல் போனாலோ அல்லது வேறு காரணத்தால் அழிந்து போனாலோ ஒன்று போனாலும் மற்றொன்று காப்பாத்தும் என்கிற நம்பிக்கையில் தான் இரண்டையுமே சேர்த்து நடவு செய்திருக்கிறேன்.

2 மா நிலத்தில் (66 சென்ட்), இரண்டு ரகங்களைக் கலந்தும், 1 மா நிலத்தில் (33 சென்ட்) காட்டுயானத்தை மட்டும் தனியாகவும் நடவு செய்திருக்கிறேன்”.

**நாற்றுத் தயாரிப்பு!**

நாற்றங்காலுக்கு 1 சென்ட் நிலம் தேவைப்படும். மேட்டுப் பகுதி நிலத்தில் மண் வெட்டியால் களைகளைக் கொத்தி மண்ணை பொல பொலப்பாக மாற்ற வேண்டும். அதில் ஒரு கூடை எருவைச் சேர்த்துக் கிளறி, மண்ணை சமப்படுத்த வேண்டும். 66 சென்ட் நிலத்திற்கு 9 கிலோ நெல் தேவைப்படும். 6 கிலோ காட்டுயானம் நெல், 3 கிலோ மஞ்சள் பொன்னி இரண்டையும் எடுத்துக் கொள்ளலாம். விதைக்கும் போது நெல்லைப் பிரித்தெல்லாம் விதைக்கத் தேவையில்லை. ஒன்றாகக் கலந்தே விதைக்கலாம். இவற்றை விதைத்து, தினம் ஒரு பூ வாளியால் தண்ணீர் ஊற்றி வந்தால், 15 முதல் 20 நாட்களில் நாற்று தயாராகி விடும்.

**அமுதக்கரைசல் மட்டுமே போதும்!**

பிறகு, 66 சென்ட் நிலத்தை உழுது, சேறாக மாற்றி, நாற்றுக்களைப் பறித்து, குத்தாக நடவு செய்யாமல், அரையடிக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும்.

(இரண்டு ரக நாற்றுகளைப் பிரித்து நடவு செய்யத் தேவையில்லை. இரண்டு பயிர்களுக்கும் வயது வித்தியாசம் இருப்பதால் அறுவடையின் போது எளிதாகவே பிரித்து அறுவடை செய்யலாம்). 33 சென்ட் நிலத்தில் காட்டுயானம் நெல்லை நேரடி விதைப்பாக செய்து கொள்ள வேண்டும். அதற்கு மூன்று கிலோ விதை நெல் தேவைப்படும்.காய்ச்சலும் பாய்ச்சலுமாக இருப்பது போல தண்ணீர் கட்ட வேண்டும். நடவு செய்த 15 மற்றும் 30 – ம் நாட்களில் களை எடுக்க வேண்டும்.

அந்த சமயங்களில் தொட்டி (13 லிட்டர்) ஒரு லிட்டர் அமுதக்கரைசலைக் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 10 தொட்டிகள் தேவைப்படும். வேறு எந்த ஊட்டமும் தேவையில்லை.

**தூருக்கு 190 மணிகள்!**

மஞ்சள் பொன்னியில் 15 முதல் 26 தூர்கள் வரை பிடித்து ஒரு தூருக்கு 120 முதல் 200 மணிகள் வரை இருக்கும். காட்டுயானத்தில் 25 முதல் 67 தூர்கள் வரை பிடித்து ஒரு தூருக்கு 150 முதல் 190 மணிகள் வரை கூட கிடைக்கும். 110 – வது நாளில் மஞ்சள் பொன்னி அறுவடைக்குத் தயாராகி விடும். குறைந்தபட்சம் 250 கிலோ நெல் கிடைக்கும்.

காட்டுயானம் 180 – வது நாளில் அறுவடைக்குத் தயாராகி விடும். குறைந்தது 16 மூட்டைகள் (70 கிலோ மூட்டை) வரை நெல் கிடைக்கும்.

**ஒரு மூட்டை 1,100 ரூபாய்!**

பூச்சிக்கொல்லி, உரம் என்று எதுவும் கொடுக்காததால் கிடைக்கிறது எல்லாமே லாபம்தான் மஞ்சள் பொன்னியில் 280 கிலோ நெல் அறுவடை செய்தேன். காட்டுயானத்தை இன்னும் ஒரு மாதம் கழித்து தான் அறுவடை செய்ய வேண்டும். தூர் பிடித்திருப்பதை வைத்துப் பார்த்தால் 18 மூட்டை வரைக்கும் கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறேன். ஏக்கருக்கு மொத்தம் 21 மூட்டைக்குக் குறையாமல் கிடைக்கும். இயற்கை முறை நெல் என்பதால் கூடுதல் கூடுதல் விலையும் கிடைக்கிறது. இப்பொழுது ஒரு குவிண்டால் நெல் 1,100 ரூபாய்க்கு அரசாங்கம் எடுக்கிறார்கள்.

ஆனால் என்னுடைய நெல் 70 கிலோ மூட்டையே 1,100 ரூபாய் வரை விலை போகிறது. அது தான் இயற்கை மகிமை.

**தொடர்புக்கு:**

திரு. கரிகாலன்,
திருத்துறைப் பூண்டி,
திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி: 92456 - 21018